3. அரசினர் தீர்மானம்

பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. எஸ்.பீட்டர் அல்போன்ஸ் கூட்டத்தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கிவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் உங்களைப் பார்த்து கையசைத்துத் தவறாகப் பேசிவிட்டுப் போனதற்கு நீங்கள் நிச்சயம் அவருக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார். ஆனால் இங்கே நடந்து கொண்ட முறை என்பது மிகப் பெரிய தவறு. அவருக்குத் தண்டனை வழங்க வேண்டுமானால் (குறுக்கீடு) இப்போது கூட நடவடிக்கை எடுக்கலாம். அதைத் தீர்மானமாக நிறைவேற்றுவீர்களானால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவர்மீது தண்டனை கொடுத்து அனுப்புவதாக இருந்தால், இப்போது தீர்மானம் நிறைவேற்றியாக வேண்டும். (குறுக்கீடு) திரு. கே. கே. சின்னப்பன்.

திரு. கே.கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் மட்டும் அல்லாமல், பீட்டர் அல்போன்சும் இந்த சபையிலே அடிக்கடி ஒருமையிலே பேசியிருக்கிறார். தங்களையும் இங்கே இருக்கிற உறுப்பினர்களையும், எங்களையும் நேரடியாகவே பேசியிருக்கிறார். இன்றையதினம் இந்த அவையிலே உங்களை ஒருமையிலே கையை நீட்டி எச்சரிக்கை செய்வதைப் போல சைகை காட்டிப் பேசியிருக்கிறார். எனவே, அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அவையின் முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று இந்த அவையின் சார்பாக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டதைப் போன்று,

"மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்த அவையினுடைய கண்ணியத்தைக் குறைக்கிற வகையிலும், இந்த அவையில் எடுத்துச் சொல்லப்படக்கூடாத மொழிகளைச்

1995 ஏப்ரல் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சொல்லிவிட்டுச் சென்றிருக்கிற காரணத்தாலும், மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பலபேரும் அவர் மீது நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவதன் காரணமாகவும், ஏற்கனவே இப்படிப்பட்ட முறைகளில் ஈடுபட்டவர்கள் மீது தாங்கள் எப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்துக் கொண்டீர்களோ, அதே அடிப்படையில் இந்தத் தொடர் கூட்டம் முடிகிற வரையிலும் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களையும் விலக்கி வைக்கவேண்டும்"

என்ற தீர்மானத்தை, நம்முடைய சட்டப் பேரவை விதிகளில் 121(2)-வது விதியின் கீழ் நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

4. உறுப்பினர்கள் திரு. ஜி. விசுவநாதன் மற்றும் திரு. அழகு திருநாவுக்கரசு பதவி இழப்பு என அறிவிக்கக் கோரிய மனு மீது பேரவைத் தலைவரின் அறிவிப்பு.

Hon. Speaker: An announcement to the House. I am to inform the House that I have received a petition from Tmt. Mariam-Ul-Aasia, M.L.A. against Thiru G. VISWANATHAN, M.L.A. under the Tenth Schedule of the Constitution of India which deals with the provisions as to disqualification on the ground of defection read with The Members of the Tamil Nadu Legislative Assembly (Disqualification on Ground of Defection) Rules, 1986. In the petition the Member has prayed that--

(1) that the Hon. Speaker may be pleased to disqualify the Respondent Thiru G. Viswanathan, from being a Member of the Tamil Nadu Legislative Assembly as per the provisions of law, that is the Tenth